ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/6 - 2016 සැප්තැම්බර් මස 26 වැනි සඳුදා - 2016.09.26

*1986/6 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**கமத்தொழில் அமைச்சின் கருமப் பணிகளை கௌரவ இராஜாங்க கமத்தொழில் அமைச்சர் அவர்களுக்கு ஒப்படைத்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் கமத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்கள் மற்றும் கருமப் பணிகள் என்பவற்றை கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய கருமங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பும் மற்றும் அதிகாரத்தத்துவங்களும், அரசியலமைப்பின் 44 (5) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கௌரவ இராஜாங்க கமத்தொழில் அமைச்சர் வசந்த லக்சுமினாத் அலுவிகாரை அவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றன எனவும், அதே போன்று இந்த அமைச்சின் விடயப் பரப்பின் கீழ்வரும் அனைத்துக் கருமங்கள் தொடர்பில் தேடிப்பார்க்கும், தலையிடும், ஒருங்கிணைந்து தொழிற்படும் வாய்ப்புகள் மேலும் இராஜாங்க அமைச்சருக்கு உண்டு எனவும் வெளிப்படுத்தி இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

| *கருமங்களும் பொறுப்புப் பணிகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், நிறுவனங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள்* |
|---|---|---|
| *1. பல வகையான விவசாயப் பிரிவுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குதல், கல்வி மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகளை வியாபிப்பதற்கான முறையியல்களைத் தயாரித்தல்.* | *1. ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்.*<br>*2. இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான சபை.* | *1. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டம்.*<br>*2. 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபைச் சட்டம்.* |

| கருமங்களும் பொறுப்புப் பணிகளும் | திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், நிறுவனங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் |
|---|---|---|
| 2. விவசாய உற்பத்திகளின் அடிப் படையில் தொழில் முயற்சி யாளர்களை ஊக்குவித்தல், சந்தை வாய்ப்புகளை விஸ்தரித் தல் முதலியவற்றுக்கு தேவை யான நடவடிக்கைகளை எடுத் தல். | 3. அறுவடைக்குப் பின், தொழில் நுட்ப நிறுவகம். | 3. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரசாங்க விவசாயக் கூட்டுத் தாபனங்கள் சட்டத்தின் ஒழுங்கு விதிகள். |
| 3. உள்நாட்டு விவசாய உற்பத்தி களின் தரத்தை நுகர்வோருக்கு உத்தரவாதப்படுத்தத் தேவை யான திட்டங்களைத் தயாரித் தல். | | |

துமிந்த திஸாநாயக்க,
கமத்தொழில் அமைச்சர்.

கமத்தொழில் அமைச்சு,
“கொவிஜன மந்திரய,
இல. 80/5, ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2016, செத்தெம்பர் 15.

10- 211

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.